## பொதுக்காலத்தின் 12-ஆம் ஞாயிறு

## திருவிவிலிய வாசகங்கள்

*எரேமியா 20:10–13*

*உரோமையர் 5:12–15*

*மத்தேயு 10:26–33*

### மையப்பொருள்

"அச்சத்திலிருந்து இறைநம்பிக்கைக்கும், அந்த இறை நம்பிக்கையிலிருந்து துணிச்சலான, மற்றும் உறுதியான ஒளிமயமான சாட்சிய வாழ்விற்கும் கடந்து செல்லுதல்."

### முன்னுரை

ஒருமுறை மனிதர் ஒருவர், தமக்கு அறிமுகமில்லாத ஒரு காட்டுப் பகுதியில் நடந்து சென்றபோது வழியைத் தவறவிட்டார். மாலை நெருங்க நெருங்க, அவருக்குள் பதற்றம் அதிகரிக்கத் தொடங்கியது. பாதை முற்றிலும் மறைந்தது போல் தோன்றியது, எல்லா திசைகளும் ஒன்றுபோலவே காட்சியளித்தன. பீதி அவரை ஆட்கொள்ளத் தொடங்கிய அந்தத் தருணத்தில், தொலைவில் ஒரு சிறிய வெளிச்சத்தைக் கண்டார் –அது ஒரு சிறிய குடிலின் சாளரத்திலிருந்து (ஜன்னல்) வந்த ஒளி. அந்த வெளிச்சம் அவரைச் சுற்றியிருந்த இருளை உடனடியாக அகற்றிவிடவில்லை, ஆனால் அது அவருக்கு ஒரு திசையையும், நம்பிக்கையையும், தொடர்ந்து முன்னோக்கி நடப்பதற்கான துணிச்சலையும் கொடுத்தது.

பல வழிகளில், இந்த அனுபவம் நம்முடைய வாழ்க்கையையும் பிரதிபலிக்கிறது. நாம் அனைவரும் நம்முடைய எதிர்காலத்தைக் குறித்தும், பிறரைக் குறித்தும், ஏன், நம்மைப் பற்றியே கூட நிச்சயமற்ற தன்மை, பயம் மற்றும் தயக்கம் நிறைந்த தருணங்களைச் சந்திக்கிறோம். சில நேரங்களில், நாம் பின்வாங்க வேண்டும், மௌனமாக இருக்க வேண்டும், நமக்கு மிகவும் முக்கியமானவற்றை மறைத்து வைக்க வேண்டும் என்ற அழுத்தத்தை உணர்கிறோம்.

இன்றைய இறைவார்த்தைகள் அந்த யதார்த்தத்தோடு நேரடியாகப் பேசுகின்றன. இயேசுவின் இந்த வார்த்தைகளை நாம் மீண்டும் மீண்டும் கேட்கிறோம்

**“அஞ்சாதீர்கள்.”**

வாழ்க்கை சவால்கள் இல்லாதது என்பதால் அல்ல, மாறாக இறைவனின் ஒளி ஏற்கனவே அங்கு இருப்பதனால் தான். நாம் அடிக்கடி கற்பனை செய்து பார்ப்பதை விடவும் மேலாக, நாம் இறைவனால் நேரடியாக பார்க்கப்படுகிறோம், அறியப்படுகிறோம், ஆழமாக அன்பு செய்யப்படுகிறோம்.

இருப்பினும், பயம் இன்னும் எவ்வாறு நம்மை ஆட்கொள்கிறது என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம்–நாம் எவ்வாறு தயங்கி நிற்கிறோம், மௌனமாக இருக்கிறோம் அல்லது நமக்குள்ளே இருக்கும் உண்மையிலிருந்து ஒளிந்து கொள்கிறோம் என்பதை நாம் அறிவோம். எனவே, நமது பயங்கள், பலவீனங்கள் மற்றும் துணிச்சலுக்கான நமது தேவையை இறைவனிடம் ஒப்படைத்து, அவருடைய இரக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்களாய், இந்தத் திருப்பலிக் கொண்டாட்டத்தின் பாவமன்னிப்பு வழிபாட்டிற்குள் நுழைவோம்.

## மறையுறை

ஒருமுறை நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்: ஒவ்வொரு நாளும் விடியற்காலையில், அன்றாட வேலைகள் தொடங்குவதற்கு முன்பு, அவர் ஒரு கோப்பை காபியுடன் தனது சிறிய தோட்டத்திற்குள் செல்வது வழக்கமாம். அது ஒன்றும் பெரிய தோட்டம் அல்ல–சில புதர்கள், ஒரு சிறிய புல்வெளி மற்றும் பறவைகளுக்குத் தீவனம் வைக்கும் ஒரு கூண்டு, அவ்வளவுதான். ஆனால், அதற்கு அப்பால் ஒரு சிறிய ஆலயத்தின் நிலத்திற்குச் சொந்தமான உயரமான மரங்கள் வளர்ந்து நின்றன. அந்த மரக்கிளைகளின் இடையே, முதல் பார்வையில் யாருடைய கவனத்தையும் ஈர்க்காத வகையில் சிட்டுக்குருவிகள் இருந்தன.

"அவற்றில் பெரிய விசேஷம் ஒன்றும் இல்லை, வெறும் சாதாரண பறவைகள் தான்" என்று அவர் முதலில் கூறினார்.

ஆனால், அவர் அவற்றைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார். அப்படி கவனித்தபோது, அவரிடம் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டது. அந்த அதிகாலை நேரத்தின் அமைதி இனி வெறுமையாக இல்லை–அது உயிர் பெற்றது. அவற்றின் அசைவுகள், அவற்றின் கீச்சொலிகள், மரங்களில் மறைந்திருந்த அவற்றின் இருப்பு ஆகியவை, அவர் இதற்கு முன்பு ஒருபோதும் உணராத வகையில் அந்த விடியற்காலைப் பொழுதை நிரப்பின.

ஒரு நாள் காலையில், அவர் எதிர்பாராத ஒரு கேள்வி ஒரு மெல்லிய எண்ணமாக அவருக்குள் எழுந்தது:

இறைவன் இந்த மிகச்சிறிய, சாதாரணமான பறவைகளையே கவனித்துக் கொள்கிறார் என்றால்... அவரே என்னையும் இதேபோல கவனித்துக் கொள்ளக்கூடும் அல்லவா?"

எளிமையாகத் தோன்றும் இந்தக் கேள்வி, இன்றைய நற்செய்தியின் வாயிலைத் திறக்கிறது.

இயேசு சிட்டுக்குருவிகளைப் பற்றிப் பேசுகிறார்–அவருடைய காலத்தில் அவை எவ்வளவு சாதாரணமானவை என்றால், அவற்றின் பொருளாதார மதிப்பு மிகக் குறைவு, ஒரு காசுக்கு இரண்டு சிட்டுக்குருவிகள் விற்கப்பட்டன. இருந்தாலும் இயேசு கூறுகிறார்:

உங்கள் தந்தையின் அனுமதியின்றி அவற்றுள் ஒரு சிட்டுக்குருவி கூட தரையில் விழாது... அந்த சிட்டுக்குருவிகளைவிட நீங்கள் மேலானவர்கள். அல்லவா?

துணிச்சல், நற்பண்புகளுக்கான முயற்சி, அல்லது சான்று பகிர்தல் என அனைத்திற்கும் மேலாக–இவை எல்லாவற்றிற்கும் தொடக்கமாக இருப்பது இதுதான்: நீங்கள் இறைவனால் பார்க்கப்படுகிறீர்கள், அறியப்படுகிறீர்கள், அவருடைய கைகளில் தாங்கப்படுகிறீர்கள்.

இது ஏதோ ஒரு தத்துவக் கோட்பாடு அல்ல, ஏதோ மேம்போக்கான ஒன்றும் அல்ல. மாறாக, தனிப்பட்ட முறையில், மிகுந்த கவனத்தோடு, முழுமையாக இறைவன் உங்களை வழி நடத்துகிறார் என்பதாகும்.

**இருளை வெல்லும் ஒளி இறை இயேசு**

அஞ்சாதீர்கள்!" என்ற சொல்லை நாம் எத்தனை முறை கேட்டாலும் எவ்வளவுதான் கேட்டாலும், அச்சம் என்பது நம் மனதின் ஆழத்தில் எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கிறது.

ஒருமுறை ஒரு பெண்மணி, தன் பணியிடத்தில் விசுவாசத்தைப் பற்றிய பேச்சுகள் எழும்போது, தான் மெதுவாக பின்வாங்கிவிடுவதாக ஒப்புக்கொண்டார். அவருக்கு இறைநம்பிக்கை இல்லாததால் அல்ல—மாறாக, எல்லாரும் தன்னை ஒரு மாதிரியாக பார்க்கக் கூடாது என்பதற்காகவே. "எனவே அமைதியாக இருந்துவிடுவது எளிது," என்றார் அவர்.

அந்த அமைதியான தயக்கம் விசித்திரமானது அல்ல. அது அநேக நேரங்களில் பெரிய துன்புறுத்தலாகவோ அல்லது வெளிப்படையான எதிர்ப்பாகவோ தெரிவதில்லை. மாறாக, அது மிகவும் நுட்பமானது: மற்றவர்களிடமிருந்து நாம் பெரிதாக வேறுபட்டுவிடக் கூடாது என்ற அழுத்தம், நம் விசுவாசத்தை வெளிப்படையாகக் கூறத் தயங்குவது, அல்லது காலத்திற்கு ஒவ்வாதவராகக் காட்டிக்கொள்ளக் கூடாது என்ற பயம்.

மனிதர்களின் இத்தகைய மிகச் சாதாரணமான வாழ்வியல் சூழ்நிலையில்தான், இயேசுவின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒரு சீரான இதயத்துடிப்பைப் போல ஒலிக்கின்றன:

அஞ்சாதீர்கள்!"

இயேசு அஞ்சாதீர்கள் என்று ஒருமுறை மட்டும் சொல்லவில்லை, ஏதோ கடமைக்காகவும் சொல்லவில்லை. மாறாக, பயம் என்ற நோய் மனித இதயத்தில் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை அவர் அறிந்திருப்பதால், மீண்டும் மீண்டும் அஞ்சாதீர்கள் என்று கூறுகிறார்.

நோயை மறைந்து வைத்திருந்தார். குணமடைவதில்லை

ஆனால் நேர்மையாகச் சொல்வதானால், பயம் என்பது மற்றவர்கள் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றியது மட்டுமல்ல. அதற்குப் பின்னால் இன்னும் மறைவான, இன்னும் தனிப்பட்ட மற்றொரு பயமும் இருக்கிறது.

ஒரு பெரிய மனிதர், தான் எப்போதுமே தனிமையையும் அமைதியையும் தவிர்த்து வந்ததாகக் கூறினார். காரில் செல்லும்போது இசை, பின்னணியில் தொலைக்காட்சி, அல்லது எப்போதும் ஏதாவது ஒரு வேலை. "ஏன் அப்படி?" என்று கேட்டபோது, அவர் சற்று தயங்கி, இறுதியில் உண்மையை ஒப்புக்கொண்டார்:

"ஏனென்றால், எல்லாமே அமைதியாக இருக்கும் போது என்னைப் பற்றி நான் பார்க்க விரும்பாத பல காரியங்களை என் உள்ளத்தில் நான் பார்க்கத் தொடங்குகிறேன்."

இதுதான் இன்றைய நற்செய்தியின் ஆழமான தளமாகும்.

புனித பவுல் இதை "பழைய ஆதாம்" என்று அழைக்கிறார்—நம்மில் உள்ள அந்த உள்மனக் காயம், அது உண்மையை எதிர்க்கிறது, அன்பை எதிர்க்கிறது, மேலும் குணமடைவதை விட மறைந்து வைப்பதையே விரும்புகிறது. நாம் அதை பல வடிவங்களில் காண்கிறோம்: விவரிக்க முடியாத எரிச்சல், உள்ளுக்குள் வளர்க்கும் மனக்கசப்பு, நாம் மீண்டும் மீண்டும்

கூறும் சாக்குபோக்குகள், அல்லது பேச வேண்டிய நேரத்தில் பேசாமல் காக்கும் மௌனம் போன்ற

நம்முடைய இயல்புகள் எப்போதும் ஒன்றாகவே இருக்கிறது: அதை எவ்வாறு சமாளிப்பது, அடக்குவது அல்லது தவிர்ப்பது என்று தவிக்குறோம்.

ஆனால் நற்செய்தி மென்மையாக ஒரு மாற்று உண்மையை நமக்கு வெளிப்படுத்துகிறது: மறைவாக இருக்கும் யோய் ஒருபோதும் குணமடைவதில்லை.

அதனால்தான் கிறிஸ்து, மற்றவர்களைக் குறித்து "அஞ்சாதீர்கள்" என்று மட்டும் கூறவில்லை. மாறாக, நம் உள்ளத்திற்குள் தைரியமாக இருக்கவும் அவர் நம்மை அழைக்கிறார்: உண்மைக்குள்ளும், ஒளிக்குள்ளும், நடந்து கடவுளுக்கு முன்பாக நேர்மையாக அடியெடுத்து வைக்கும் தைரியம் அதுதான்

**கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் புது வாழ்வு.**

ஒரு மனிதர், பல வருடங்களாகத் தனக்கு ஏற்பட்ட திடீர் கோப வெடிப்புகளால் அவதிப்பட்டு வந்தார். மற்ற நேரங்களில் அவர் மிகவும் அமைதியானவராகவும், கனிவானவராகவும் இருந்தார்– ஆனால் ஏதேனும் ஒன்று அவரைத் தூண்டிவிட்டால், யாரோ வேறொரு நபர் தனக்குள் நுழைந்தது போல் ஆகிவிடும். அதற்குப் பிறகு அவமானம், குழப்பம், வருத்தம் ஆகியவை தொற்றிக்கொள்ளும். "என்னை என்னாலேயே அடையாளம் காண முடியவில்லை, நான் முற்றிலும் கட்டுப்பாட்டை இழந்துவிடுகிறேன்" என்றார் அவர்.

அவர் எல்லாவற்றையும் முயன்று பார்த்தார்: சுயக்கட்டுப்பாடு, உத்திகள், ஒழுக்கம், ஏன்… அத்தகைய சூழ்நிலைகளைத் தவிர்ப்பது வரை. ஆனால் எதுவுமே நிலைக்கவில்லை.

இறுதியில் ஒரு நாள், பெரிய உணர்ச்சிப் பெருக்கோ ஆரவாரமோ இன்றி, அவர் ஒரு மிக எளிய ஜெபத்தைச் ஜெபித்தார்:

"ஆண்டவரே, நீரே என் வாழ்வின் ஆண்டவராய் இரும்."என் கோபத்தை நீர் எடுத்துக் கொள்ளுங்கள். “

அந்த ஜெபத்தின் நேரத்தில், வியத்தகு முறையில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால், ஒரு மாற்றம் அங்கு தொடங்கப்பட்டிருந்தது.

சில மாதங்களுக்குப் பிறகு, அவரை விட அவரைச் சுற்றியிருந்தவர்கள் அந்த மாற்றத்தைக் கவனித்தனர். அந்த கோபம் இன்னும் நினைவில் இருந்தது, ஆனால் அதற்குரிய வல்லமை அவரிடம் இல்லை. அது இனி அவரை ஆளவில்லை.

பின்னர் அதைக் குறித்து அவர் சிந்தித்துக் கூறும்போது, வியக்கத்தக்க ஒன்றைச் சொன்னார்:

"எனக்குள் இருந்த பழைய நினைவுகள் பின்வாங்கிவிட்டது போலவும், ஒரு புதிய காரியம் அமைதியாக அதன் இடத்தைப் பிடித்துக்கொண்டது போலவும் இருந்தது."

புனித பவுல் கிறிஸ்துவை "புதிய ஆதாம்" என்று குறிப்பிடும்போது இதையே தான் அர்த்தப்படுத்துகிறார்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இருளுக்குள் நம் சொந்த பலத்தால் போராடுவது அல்ல. மாறாக, அது ஒளிரும் அளவிற்கு

கதவைத் திறந்து, கிறிஸ்துவை அந்த இடத்தில் அமரச் செய்வதாகும். ஏனெனில், இருளை வற்புறுத்தி விரட்ட முடியாது; ஒளி உள்ளே நுழையும் போது இருள் தானாகவே மறைந்துவிடும்.

### அச்சத்தை வெல்லும் அர்ப்பணம்

நமக்குள்ளே ஒரு மாற்றம் ஏற்பட்டுத்தும் போது கூட, அடுத்ததாக நாம் எடுக்க வேண்டிய மற்றொரு படிநிலை உள்ளது: அது வெளிநோக்கி வைக்கும் அடித்தளம். கிறிஸ்துவைத் தனிப்பட்ட முறையில் நம்புவது ஒருபுறம் இருக்கட்டும் ஆனால் அவரைப் பிறர் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்று சான்று பகர்வது என்பது மிகவும் கடினமான ஒன்று.

ஒரு முன் அனுபவம் இல்லாத இளம் போதகர் ஒருவர் திருப்பலிக்கு முன் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார். ரகசியப் போலீசார் அவருக்கு எதிராகப் பயன்படுத்துவதற்குக் குறை ஏதேனும் கிடைக்குமா என்று தேவாலயத்தில் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"எனக்கு பயமாக இருக்கிறது," என்று அருகில் இருந்த ஒரு முதிய குருவிடம் அவர் மெதுவாகக் கூறினார்.

அந்த முதிய குரு அமைதியாகப் பதிலளித்தார்:

"எனக்கு இறைவார்த்தையை அறிவிக்காமல் இருக்கத்தான் அதிக பயமாக இருக்கிறது—ஏனெனில் கடவுள் இங்கே இருக்கிறார்."

அந்தத் தருணம் நற்செய்தியின் ஒரு திருப்புமுனையாக மாறுகிறது. ஏனெனில், மனிதக் கருத்துக்களின் பயத்தை விட கடவுள் நமக்கு உண்மையானவராக மாறும்போது, அங்கே ஏதோ ஒன்று மாறுகிறது. பயம் மறைந்துவிடுவதில்லை—ஆனால், அது நம்மை ஆளும் அதிகாரத்தை இழந்துவிடுகிறது.

இருப்பினும், நற்செய்தி நம்மைப் பற்றி எதார்த்தமாகவே பேசுகிறது. இந்தத் துணிச்சலில் நாம் எப்போதும் வெற்றி பெறுவதில்லை. பேதுருவும் இதில் வெற்றி பெறவில்லை.

நெருக்கடியான அந்தத் தீர்க்கமான தருணத்தில், பயம் விசுவாசத்தை விட சத்தமாகப் பேசியதால், அவர் இயேசுவை ஒருமுறை அல்ல, மூன்று முறை மறுதலித்தார்.

ஆனாலும்—அது அவருடைய கதையின் முடிவு அல்ல. பேதுரு மனம் உடைந்து அழுதார், திரும்பி வந்தார், மீண்டும் நிலைநிறுத்தப்பட்டார். இயேசு அவரிடம் மீண்டும் ஒரு பொறுப்பை ஒப்படைத்தார்: "என் ஆடுகளை மேய் “” என்று கட்டளையிட்டார்

இது நமக்கு மிகவும் முக்கியமானது. ஏனெனில், அது நமக்கு ஒரு அத்தியாவசியமான உண்மையைச் சொல்கிறது: தோல்வி என்பது முடிவல்ல; பயம் என்பது இறுதி வார்த்தையல்ல. ஒளிக்குத் திரும்பி வர எப்போதும் ஒரு வழி இருக்கிறது. அதுதான் ஒளியின் வருகை.

இறுதியாக ஒரு காட்சியை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு இருண்ட அறையை கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் கதவுகளைத் திறந்து, கைகளால் வீசி, அந்த இருளை வெளியே தள்ள முயற்சிக்கிறீர்கள். எதுவும் மாறவில்லை.

பின்னர் நீங்கள் ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறீர்கள்.

ஆரம்பத்தில், அது மிகவும் சிறியதாகத் தோன்றலாம். ஆனால் மெதுவாக, அமைதியாக, இருள் பின்வாங்கத் தொடங்குகிறது– இருள் தோற்கடிக்கப்பட்டதால் அல்ல, ஒளியின் பிரகாசத்தால் இருள் மறைந்து போகிறது. ஒளி இருளோடு சண்டையிடுவதில்லை; அது வெறுமனே உள்ளே நுழைகிறது. ஒளி இருக்கும் இடத்தில் இருள் நீடிக்க முடியாது.

எனவே, நாம் மீண்டும் அந்தப் பூங்காவிற்குத் திரும்புவோம்... அந்தச் சிட்டுக்குருவிகளிடமும், இன்று எல்லாவற்றிற்கும் அடியில் ஓடிக்கொண்டிருக்கும் அந்த அமைதியான, மறைந்திருக்கும் உண்மையிடமும் திரும்புவோம்:

* நீங்கள் இறைவனால்  பார்க்கப்படுகிறீர்கள்.

* நீங்கள் இறைவனால் அறியப்படுகிறீர்கள்.

* நீங்கள் இறைவனால் தாங்கப்படுகிறீர்கள்.

அந்த நம்பிக்கையிலிருந்து, ஏதோ இனம்புரியாத ஒன்று வளரத் தொடங்குகிறது. பயம் தன் பிடியைத் தளர்த்துகிறது. இதயம் திறக்கிறது. மெதுவாக, கனிவாக, ஒரு மாறுபட்ட வாழ்க்கை முறை நம் கண்ணுக்குப் புலப்படத் தொடங்குகிறது. அது சத்தமானது அல்ல, வற்புறுத்தப்பட்டது அல்ல, வியத்தகு நாடகமும் அல்ல... ஆனால் அது உண்மையானது, ஒளியால் நிரம்பியது.

எனவே, நற்செய்தி எளியதாக, வலுவானதாக, மற்றும் ஆழமான தனிப்பட்ட உண்மையாக நிலைத்திருக்கிறது:

மீண்டும் சொல்கிறேன் அஞ்சாதீர்கள்!

மற்றவர்களைக் கண்டு அஞ்சாதீர்கள்

உங்களைக் கண்டு அஞ்சாதீர்கள்

உங்கள் எதிர்காலத்தைக் கண்டும் அஞ்சாதீர்கள்

ஏனெனில் நீங்கள் இறைவனால் மட்டுமே தாங்கப்படுகிறீர்கள்

இறை சக்தியால் தாங்கப்படும் எதுவும், இனி இருளில் தொலைந்து போகாது! ஒளியால் தொடப்பட்ட எதுவும், இனி இருளில் மறைந்திருக்க முடியாது!

ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai